செ.வெ.எண் -04 நாள்: 03.01.2022

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் மருத்துவ முகாமில் கலந்துக்கொண்டு தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி இ.ஆ.ப,.** அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

அரியலூர் மாவட்டதில் உள்ள அனைத்து வகை மாற்றுத்திறனாளிகளுக்கும் தேசிய அடையாள அட்டை வழங்கிடவும் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் சிரம்மங்களை தவிர்த்திடும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொது மக்கள் குறைதீர்க்கும் கூட்ட அரங்கில் மாதத்தில் முதல் (06.01.2022) மற்றும் மூன்றாம் (20.01.2022) வியாழக் கிழமைகளில் அனைத்து மருத்துவர்கள் கொண்டு நடைப்பெறவுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை தேவைப்படும் மாற்றுத்திறனாளிகள் ஆதார் அட்டை நகல், குடும்ப அட்டை நகல், முகம் மட்டும் தெரியும் படியான புகைப்படம் - 05 ஆகியவற்றுடன் மாற்றுத்திறனாளிகள் நேரில் வருகைபுரிந்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி இ.ஆ.ப,.** அவர்கள் தனது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**